www.StudyGuideIndia.com

7776

Register Number

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

*அறிவுரை :* அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

*குறிப்பு :* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. முன்கூட்டிப் பெற்ற வருமானம் இருப்புநிலைக் குறிப்பின் ...................... பக்கத்தில் தோன்றும்.

2. பற்பல கடனாளிகளிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன் ...................... எனப்படும்.

3. 1. 4. 2007 இருப்பாய்வின் வங்கிக்கடன் ரூ. 4,00,000 வட்டிவீதம் ஆண்டிற்கு 10% வட்டி செலுத்தியத் ரூ. 30,000. 31. 3. 2008 அன்று நிலுவையிலுள்ள வட்டி ரூ. ......................

4. ஒரு நிலை அறிக்கை ...................... போன்று தோற்றமளிக்கும்.

5. ஒரு தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் ரூ. 6,00,000; முதல் ரூ. 4,50,000; அந்நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ. ...................... ஆகும்.

[ Turn over

6. சொத்தின் மொத்த அடக்கவிலை மீது தேய்மானம் கணக்கிடும் முறை ........................ என அழைக்கப்படும்.

7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ. 75,000. அதை விற்றதில் ஏற்பட்ட நட்டம் ரூ. 25,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு ரூ. ........................ .

8. மொத்த இலாபத்தை ........................ இருந்து விற்றபொருளின் அடக்க விலையைக் கழிப்பதன் மூலம் காணலாம்.

9. ஆண்டுத்தொடக்கத்தில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 66,000. ஆண்டு இறுதியில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 34,000 எனில் சராசரி சரக்கிருப்பின் மதிப்பு ரூ. ........................ .

10. ரொக்கத் திட்டப்பட்டியல் ........................ என்றும் அழைக்கப்படுகிறது.

11. பகிர்ந்துதரா நட்டம் இருப்புநிலைக் குறிப்பின் ........................ பக்கத்தில் தோன்றும்.

12. தொழிலின் இலாப நட்டங்களை கூட்டாளிகளிடையே ........................ விகிதத்தில் பங்கிட்டுக் கொள்கின்றனர்.

13. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும் பொழுது, அது ........................ இனமாகும்.

14. இரு அழைப்புகளுக்கிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி ........................ ஆகும்.

15. தீபக் வரையறு நிறுமம் முழுவதும் ஒப்பப்பட்ட ஒவ்வொன்றும் ரூ. 10 முக மதிப்புடைய 1,00,000 பங்குகள் வெளியிட்டது. அழைக்கப்பட்டத் தொகை பங்கொன்றுக்கு ரூ. 8 எனில், அழைக்கப்படாத முதல் ரூ. ........................ ஆகும்.

www.StudyGuideIndia.com

II. •சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. கொடுபட வேண்டிய சம்பளம் ...................... ஆகும்.

அ) ஒரு பொறுப்பு

ஆ) ஒரு சொத்து

இ) ஒரு வருமானம்.

17. 31. 3. 2009 நாளன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 55,000. வாராக்கடன் ரூ. 5,000 போக்கெழுதப்பட வேண்டும். மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. ...................... ஆகும்.

அ) ரூ. 2,550

ஆ) ரூ. 2,600

இ) ரூ.2,500.

18. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது

அ) வியாபாரக் கணக்கு

ஆ) இலாப அல்லது நட்ட அறிக்கை

இ) நிலை அறிக்கை.



www.StudyGuideIndia.com

19. 2008 ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் ரூ. 1,00,000. 2009 மார்ச் 31 அன்று கடனீந்தோர் ரூ. 85,000. அவ்வாண்டில் கடனீந்தோருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ. 1,30,000. எனில், அவ்வாண்டின் கடன் கொள்முதல் ........................ ஆகும்.

அ) ரூ. 2,15,000

ஆ) ரூ. 1,15,000

இ) ரூ. 1,85,000.

20. குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம்

அ) ஆண்டு தோறும் குறையும்

ஆ) ஆண்டு தோறும் அதிகமாகும்

இ) ஆண்டு தோறும் நிலையாக இருக்கும்.

21. ரூ. 3,00,000 மதிப்புள்ள ஒரு சொத்தின் மீது ஆண்டுக்கு 10% வீதம் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது. மூன்றாம் ஆண்டு இறுதியில் அச்சொத்தின் ஏட்டு மதிப்பு ........................ ஆகும்.

அ) ரூ. 2,10,000

ஆ) ரூ. 2,40,000

இ) ரூ. 2,70,000.

22. நீர்மைப் பொறுப்புகள் என்பது

அ) நடப்பு பொறுப்புகள்

ஆ) நடப்புப் பொறுப்புகள் – வங்கி மேல்வரைப்பற்று

இ) நடப்புப் பொறுப்புகள் + வங்கி மேல்வரைப்பற்று.

www.StudyGuideIndia.com

23. அனைத்து வகையுடைமை விகிதங்களும் ..................... ஆல் கொடுக்கப்படும்.

அ) விகிதாச்சாரம்

ஆ) மடங்கு

இ) சதவீதம்.

24. திட்டப்பட்டியல் வெளிப்படுத்துவது

அ) பணம்

ஆ) அலகுகளின் எண்ணிக்கை

இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை.

25. நிலைமுதல் முறையில் கூட்டாளிகளின் இலாபப் பங்கு பதியப்படுவது

அ) நடப்புக் கணக்கில்

ஆ) முதல் கணக்கில்

இ) எடுப்புக் கணக்கில்.

26. புதிய கூட்டாளி சேர்க்கையில் ..................... கணக்கிடப்படுகிறது.

அ) ஆதாய விகிதம்

ஆ) முதல் விகிதம்

இ) தியாக விகிதம்.



www.StudyGuideIndia.com

27. விலகும் கூட்டாளிக்குச் சேர வேண்டிய தொகையைக் கண்டறிய தயாரிக்கப்படும் கணக்கு

அ) முதல் கணக்கு

ஆ) கடன் கணக்கு

இ) இலாப நட்டப் பகிர்வு க/கு.

28. இருப்புநிலைக் குறிப்பில் முதலினக் காப்பு ...................... பக்கம் தோன்றும்.

அ) பொறுப்புகள்

ஆ) சொத்துக்கள்

இ) இரண்டும்.

29. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை ...................... என்று அழைக்கலாம்.

அ) மிகை ஒப்பம்

ஆ) குறை ஒப்பம்

இ) முழு ஒப்பம்.

30. ஒறுப்பிழப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ. 800. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த வகையில் நட்டம் ரூ. 300 எனில், முதலினக் காப்பு ...................... .

அ) ரூ. 400

ஆ) ரூ. 500

இ) ரூ. 300.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50 )

குறிப்புகள் : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. கொடுபட வேண்டிய செலவுகள் என்றால் என்ன ?

32. நிலையறிக்கை என்றால் என்ன ?

33. தேய்மானம் - வரைவிலக்கணம் தருக.

34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் முக்கியத்துவம் யாவை ?

35. ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து உதாரணம் தருக.

36. நற்பெயர் என்றால் என்ன ?

37. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன ?

38. முதல் மீது வட்டி ரூ. 6,000 அனுமதித்து குறித்த சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக.

39. விடுபட்ட தொகையைக் காண்க :

| | ரூ. |
|---|---|
| அவ்வாண்டில் பெற்ற இலாபம் | 5,000 |
| இறுதி முதல் | 12,000 |
| கூடுதல் முதல் | 4,000 |
| எடுப்பு | 2,400 |
| தொடக்க முதல் | ? |



www.StudyGuideIndia.com

40. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| சொத்தின் அடக்க விலை | ரூ. 20,000 |
| இறுதி மதிப்பு | ரூ. 2,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள். |

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு புற-அகப் பொறுப்புகள் விகிதத்தைக் கணக்கிடுக :

| | ரூ. |
|---|---|
| கடனீட்டுப் பத்திரம் | 2,00,000 |
| வங்கிக் கடன் | 1,00,000 |
| சாதாரண பங்கு முதல் | 1,25,000 |
| காப்புகள் | 25,000. |

42. ஏப்ரல் 1, 2009 அன்று தொடக்க ரொக்க இருப்பு ரூ. 50,000; அம்மாதத்தில் எதிர்பார்க்கும் பெறுதல்கள் ரூ. 80,000 மற்றும் செலுத்தல்கள் ரூ. 1,00,000. ஏப்ரல் 30, 2009 க்கான இறுதி ரொக்க இருப்பினை கணக்கிடுக.

43. சங்கர் மற்றும் சலீம் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் சைமன் என்பவரை $\frac{1}{3}$ கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தினைக் கணக்கிடுக.

44. ஜாஸ்மின் வரையறு நிறுமம் ரூ. 10 வீதம் 50,000 பங்குகளை ரூ. 3 முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

குறிப்புகள் : i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் **45**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31. 03. 2009 அன்றைய இருப்பாய்வின் படி

பற்பல கடனாளிகள் ரூ. 85,000

சரிக்கட்டுதல்கள் :

i) ரூ. 5,000 வாராக்கடன் போக்கெழுதுக.

ii) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப்பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

*அல்லது*

ஆ) திருமதி. சங்கரி அவர்கள் 2006 ஏப்ரல் 1, அன்று ரூ. 1,50,000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் தனது சொந்த உபயோகத்திற்காக மாதம் ரூ. 3,000 வீதம் திரும்ப எடுத்துக் கொண்டார். அந்நிதியாண்டில் அவர் இட்ட கூடுதல் முதல் ரூ. 40,000.

2007 மார்ச் 31 அன்று அவரது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| | ரூ. |
|---|---|
| வங்கி இருப்பு | 15,000 |
| சரக்கிருப்பு | 85,000 |
| பற்பல கடனாளிகள் | 75,000 |
| இயந்திரம் | 45,000 |
| கையிருப்பு ரொக்கம் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 30,000 |
| முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 4,000 |

அவர் தனது ஏடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2006-07 ஆம் ஆண்டிற்கான அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் காண்க.



www.StudyGuideIndia.com

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களை விவரி.

47. ரொக்கத் திட்டப் பட்டியலின் தன்மைகள் மற்றும் நன்மைகளை விவரி.

48. நிலைமுதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

49. பிரகாஷ் வரையறு நிறுமம் 01. 04. 2006 அன்று ரூ. 3,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ. 2,30,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10% நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கப் பெறுகின்றன.

இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. பின்வரும் விவரங்களைக் கொண்டு நடப்பு விகிதம், நீர்மை விகிதம் மற்றும் துல்லிய நீர்மை விகிதம் முதலியவற்றைக் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| ரொக்கம் | 5,000 |
| கடனாளிகள் | 29,000 |
| பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 5,000 |
| குறுகிய கால முதலீடுகள் | 15,000 |
| சரக்கிருப்பு | 52,000 |
| கடனீந்தோர் | 30,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 14,000 |
| முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 2,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 10,000 |

www.StudyGuideIndia.com

51. சத்யராஜ், தர்மராஜ் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 01. 04. 2007 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ. 1,00,000, ரூ. 80,000 ஆகும். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% வழங்க ஒப்புக் கொண்டு உள்ளனர். எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 8% நிர்ணயித்துள்ளனர். எடுப்புத் தொகை சத்யராஜ் ரூ. 15,000, தர்மராஜ் ரூ. 10,000. எடுப்பு மீதான வட்டி சத்யராஜ் ரூ. 600, தர்மராஜ் ரூ. 400. சத்யராஜ் ஆண்டிற்கு ரூ. 12,000 ஊதியமாகவும், தர்மராஜ் ரூ. 3,420 கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2008, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 56,000. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கினையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

52. சத்யா வரையறு நிறுமம் முற்றும் அழைக்கப்பெற்ற ரூ. 10 முகமதிப்புடைய 3,000 பங்குகளை இறுதி அழைப்பு ரூ. 3 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 1500 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்தது.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

*குறிப்பு :* எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றுள் **53**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

53. அ) திரு. பாஸ்கர் என்பவர் முழுமை பெறா இரட்டைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31. 03. 2006 ஆம் நாளன்றைய வியாபார, இலாப நட்ட கணக்கும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்க.

| | 01. 04. 2005 ரூ | 31. 03. 2006 ரூ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

*மற்ற விவரங்கள் :*

| | ரூ. |
|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 |
| கொள்முதல் திருப்பம் | 2,500 |
| விற்பனைத் திருப்பம் | 7,500 |
| பெற்ற தள்ளுபடி | 7,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| பல்வகைச் செலவுகள் | 17,500 |
| எடுப்பு | 20,000 |
| ரொக்க விற்பனை | 2,500 |

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) விஜய், விக்ரம் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31. 03. 2009 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர் | | 70,000 | ரொக்கம் | 15,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 20,000 | கடனாளிகள் | 70,000 |
| பொதுக்காப்பு | | 40,000 | சரக்கிருப்பு | 30,000 |
| முதல் : | | | இயந்திரம் | 25,000 |
| விஜய் | 80,000 | | கட்டிடம் | 1,00,000 |
| விக்ரம் | 40,000 | 1,20,000 | இலாப நட்டக் க/கு | 10,000 |
| | | 2,50,000 | | 2,50,000 |

அவர்கள் 2010 ஏப்ரல் 1 அன்று திரு. வினோத் என்பவரை கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குட்பட்டு $\frac{1}{5}$ பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டனர்.

i) வினோத் ரூ. 50,000 முதல் கொண்டு வர வேண்டும்.

ii) சரக்கிருப்பு ரூ. 21,500 என மறுமதிப்பீடு செய்வது.

iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5% போக்கெழுதுக.

iv) கட்டிடத்தை ரூ. 1,20,000 என மறுமதிப்பீடு செய்வது.

v) நற்பெயர் ரூ. 40,000 என தோற்றுவிப்பது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

www.StudyGuideIndia.com

54. திரு. சரவணன் என்பவரது கீழ்கண்ட இருப்பாய்விலிருந்து 31. 03. 2009 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

**2009, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு | 45,000 | முதல் | 2,00,000 |
| வங்கி இருப்பு | 20,000 | பற்பல கடனீந்தோர் | 50,000 |
| எடுப்புகள் | 30,000 | விற்பனை | 1,70,000 |
| கூலி | 15,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 30,000 |
| கொள்முதல் | 60,000 | | |
| தொடக்க சரக்கிருப்பு | 50,000 | | |
| கட்டிடம் | 1,00,000 | | |
| பற்பல கடனாளிகள் | 85,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 20,000 | | |
| கழிவு | 8,000 | | |
| பொதுச் செலவுகள் | 10,000 | | |
| காப்பீடு | 7,000 | | |
| | 4,50,000 | | 4,50,000 |

*சரிக்கட்டுதல்கள் :*

i) இறுதிச் சரக்கிருப்பு ரூ. 30,000.

ii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க.

iii) கட்டிடம் மீது தேய்மானம் 10% அனுமதிக்க.

iv) கொடுபட வேண்டிய கூலி ரூ. 2,000.

v) முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு ரூ. 1,000.

www.StudyGuideIndia.com

55. சூர்யா வரையறு நிறுமத்தின் வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கிலிருந்து பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக.

அ) மொத்த இலாப விகிதம்

ஆ) நிகர இலாப விகிதம்

இ) இயக்க விகிதம்

ஈ) இயக்க இலாப விகிதம்.

**2005 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்குரிய**
**வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு**

பற்று வரவு

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 35,000 | விற்பனை | 4,00,000 |
| கொள்முதல் | 2,25,000 | இறுதிச் சரக்கிருப்பு | 50,000 |
| கூலி | 10,000 | | |
| மொத்த இலாபம் கீ/இ | 1,80,000 | | |
| | 4,50,000 | | 4,50,000 |
| நிர்வாகச் செலவுகள் | 10,000 | மொத்த இலாபம் கீ/கொ | 1,80,000 |
| வட்டி | 5,000 | பங்காதாயம் | 2,000 |
| இயந்திரம் விற்றதில் ஏற்பட்ட நட்டம் | 2,000 | | |
| விற்பனைச் செலவுகள் | 10,000 | | |
| நிகர இலாபம் | 1,55,000 | | |
| | 1,82,000 | | 1,82,000 |

www.StudyGuideIndia.com

56. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2009 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயார் செய்க :

| *மாதம்* | *கடன் விற்பனை (ரூ.)* | *கடன் கொள்முதல் (ரூ.)* | *அலுவலகச் செலவுகள் (ரூ.)* |
|---|---|---|---|
| 2009 ஜனவரி | 50,000 | 30,000 | 5,000 |
| " பிப்ரவரி | 75,000 | 40,000 | 7,000 |
| " மார்ச் | 1,00,000 | 65,000 | 15,000 |
| " ஏப்ரல் | 1,25,000 | 75,000 | 10,000 |
| " மே | 1,30,000 | 80,000 | 20,000 |

*கூடுதல் தகவல்கள் :*

i) 2009 மார்ச் மாதத் தொடக்க ரொக்க இருப்பு ரூ. 60,000

ii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் — ஒரு மாதம்

iii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் — இரண்டு மாதங்கள்

iv) அலுவலகச் செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்

v) 2009 மார்ச் மாதம் பெற வேண்டிய பங்காதாயம் ரூ. 15,000.

57. பாரத் வரையறு நிறுமம் ரூ. 100 மதிப்புள்ள 30,000 பங்குகளை, பங்கொன்றுக்கு ரூ. 10 முனைமத்தில் வெளியிட்டது. தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ரூ. 20 |
| ஒதுக்கீட்டின்போது | ரூ. 40 ( ரூ. 10 முனைமம் சேர்த்து ) |
| முதல் அழைப்பின் போது | ரூ. 20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 30 |

அனைத்து பங்குகளும் முழுமையாக ஒப்பப்பட்டன. இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு தொகைகள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் வங்கிக் கணக்கு, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

www.StudyGuideIndia.com